## கடலூர் பெருநகராட்சி

**2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30–ம் நாள் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு இந்நகர்மன்ற இயல்புக் கூட்டம் கீழ்க்கண்ட பொருட்களை முடிவு செய்ய நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும்.**

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 30.10.2021

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.

*பொருட்கள்*

| | |
|---|---|
| 1) | கடலூர் பெருநகராட்சிக்கு 1866ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு தற்போது சிறப்பு நிலை நகராட்சியாக உள்ளது. இந்நகராட்சியின் பரப்பளவு 27.69 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011ம் ஆண்டு கணக்கீட்டின்படி மொத்த மக்கள் தொகை 1,73,636 ஆக உள்ளது. தற்போதைய மக்கள் தொகை 1,98,000 ஆகும். மொத்தமுள்ள 45 வார்டு பகுதிகளில் குடியிருப்புகளின் எண்ணிக்கை 49515 ஆக உள்ளது. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மொத்த சாலைகளின் நீளம் 327.58 கிலோ மீட்டர் இவற்றில் நகராட்சிகளின் நீளம் 291.00 கிலோ மீட்டர், தேசிய நெடுஞ்சாலைக்கு சொந்தமானது 11.50 கிலோ மீட்டர், நெடுஞ்சாலைக்கு துறைக்கு சொந்தமானது 28.08 கிலோ மீட்டர் ஆகியவற்றை உள்ளடக்கியது.<br><br>மேற்படி, சாலைகளில் உள்ள மொத்த தெரு விளக்குகளின் எண்ணிக்கை 8570 ஆகும். இவற்றில் டியூப் லைட் எண்ணிக்கை 6842, சோடியம் லைட் எண்ணிக்கை 986, மெட்டல் ஹலைடு லைட் 250W எண்ணிக்கை 80 , ஹைமாஸ் லைட் எண்ணிக்கை 552, LED லைட் எண்ணிக்கை 80, சோலார் லைட் எண்ணிக்கை 30 ஆக உள்ளது.<br>எனவே, மேற்படி 8570 தெரு விளக்குகளில் 612 தெரு விளக்குகளுக்கு 1 நபர் Wire man Gr.II, 1 நபர் Helper வீதம் பராமரிப்பு பணியினை நகராட்சியின் மூலம் வெளியாட்கள் ( Out sourcing ) நியமனம் செய்து பணி மேற்கொள்ள கீழ்கண்டவாறு தேவையான பணியாளர்கள் விவரம் |

Wire man Gr.II - 10 Nos.
Helper - 10 Nos.

மேற்படி, 20 நபர் வெளியாட்களை கொண்டு தெரு விளக்கு பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணிகளை மேற்கொள்ள ஒரு வருடத்திற்கு ரூ.69.00 இலட்சத்திற்கு வெளியாட்கள் (Out sourcing) மூலம் பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட பிரேரணைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட 45 வார்டுகளில் குடிநீர் விநியோக பராமரிப் பணி மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மொத்த மக்கள் தொகை 1,98,000 ஆகும். இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்பாட்டில் உள்ளதால் பொது மக்களுக்கு தேவையான அளவு 135 LPCD ஆகும். குடிநீர் ஆதாரங்கள் திருவந்திபுரம், கேப்பர்மலை மற்றும் சாவடி தலைமை நீரேற்று நிலையங்கள் ஆழ்துளை கிணறுகள் இயங்கும் நிலையில் உள்ளதில், மேல்நிலை குடிநீர் தொட்டிகள் 21 ண்ணிக்கை, திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையத்தின் மூலம் தினசரி சுமார் (4 எண்கள் ஆழ்துளை கிணறு) 5.00 யும், கேப்பர்மலை தலைமை நீரேற்று நிலையம் மூலம், தினசரி சுமார் (5 எண்கள் ஆழ்துளை கிணறு) 5.00 MLD யும், சாவடி தலைமை நீரேற்று நிலையம் மூலம் தினசரி சுமார்(2 எண்கள் ஆழ்துளை கிணறு) 1.75 MLD யும், தமிழ்நாடு வீட்டு வசதி குடியிருப்பு பகுதியில் 4 ஆழ்துளை கிணறு நீர் மின் மோட்டார் மூலம் தினசரி குடிநீர் 0.50 MLD யும் 1 கிணறுடன் கூடிய நீர் மின் மோட்டார் 0.10 MLD யும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தின் வாயிலாக கொள்ளிடம் ஆற்றுப்படுகை நீராதாரத்தை கொண்டு தினசரி சுமார் 5.50MLD ஆக மொத்தம் **20.57 MLD** கிடைக்கப் பெறுவதில் , நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு விநியோகம் செய்யும் குடிநீரின் அளவு 90 லிட்டர் ஆக உள்ளது மொத்த குடிநீர் பிரதான குழாய் 60.689 கி.மீ நீளமும் பகிர்மான குழாய்களின் நீளம் 208.00 கி.மீ ஆக உள்ளது.

எனவே, இந்நகராட்சியில் உள்ள 22 எண்ணிக்கை மேல் நிலை குடிநீர் தேக்க தொட்டி, 5 தரைமட்ட தொட்டி மற்றும் 3 எண்ணிக்கை தலைமை நீரேற்று நிலையங்கள் மற்றும் பகிர்மான குழாயின் மூலம் குடிநீர் விநயோக பராமரிப்பு பணியினை நகராட்சியின் மூலம் வெளியாட்கள் ( Out sourcing ) நியமனம் செய்து பணி மேற்கொள்ள கீழ்கண்டவாறு தேவையான பணியாளர்கள் விவரம்

| Sl.No. | Description | No | | Counting |
|---|---|---|---|---|
| 1 | Electrical Superintendent | 1 | 1 | 1 |
| | Electrician Gr.II | 1 | 4 | 4 |
| | Maintenance Assistants | 1 | 25 | 25 |
| | Pipe Line fitter | 1 | 1 | 1 |
| | Fitter bed operator | 1 | 21 | 21 |
| | Turn cock | 1 | 9 | 9 |
| | Total | | **61** | **61** |

மேற்படி, 61 நபர் வெளியாட்களை கொண்டு குடிநீர் விநியோக பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணிகளை மேற்கொள்ள ஒரு வருடத்திற்கு ரூ.165.00 இலட்சத்திற்கு

வெளியாட்கள் (Out sourcing) மூலம் பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட பிரேரணைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**3)** தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–22 ல் தெரிவித்துள்ளவாறு, கடலூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 29 அண்ணாமலை நகர் பகுதியில் விளையாட்டுத் திடல் மற்றும் பூங்காக்கள் மேம்படுத்துதல் பணி ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கும் விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**4)** தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–22 ல் தெரிவித்துள்ளவாறு, கடலூர் நகராட்சிக்கு உட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் நவீன எரிவாயு தகனமேடைகள் அமைக்கும் பணிகள் ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கும் விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | கடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 32 கரையேறவிட்ட குப்பம் பகுதியில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி | ரூ.150.00 இலட்சம் |
| 2 | கடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 33 வசந்தராயன் பாளையம் பகுதியில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி | ரூ.150.00 இலட்சம் |
| | மொத்தம் | ரூ.300.00 இலட்சம் |

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**5)** தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–22 ல் தெரிவித்துள்ளவாறு, கடலூர் நகராட்சிக்கு உட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் குளங்கள் தூர்வாரி மேம்படுத்தும் பணிகள் ரூ.140.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கும் விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | கடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 30 வண்டிப்பாளையம் சுப்ரமணியர் குளம் பகுதியில் தூர்வாரி மேம்படுத்தும் பணிகள் | ரூ.80.00 இலட்சம் |
| 2 | கடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 29 நத்தவெளி தில்லைவனத்து குளம் பகுதியில் தூர்வாரி மேம்படுத்தும் பணிகள் | ரூ.60.00 இலட்சம் |
| | மொத்தம் | ரூ.140.00 இலட்சம் |

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்.

6) கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் (SRP) 2020–21 ன் கீழ் சாலை பணிகளை மேற்கொள்ள 11.12.2020 அன்று அரசு கூடுதல் முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் நடைபெற்ற சிறப்பு சாலைகள் திட்டம் (SRP) 2020–21 க்கான திட்ட அனுமதி வழங்கும் குழுவில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ரூ.கோடியில்)

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | சிறப்பு சாலைகள் திட்ட (SRP) மானிய நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|
| கடலூர் | 6.00 | 5.40 | 0.60 |

மேற்காண் நிதி ஒதுக்கீட்டில் கீழ்கண்ட 3 சிப்பம் சாலைப்பணிகள் ரூ. 600.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது

**அட்டவணை –1** (ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | **சிறப்பு சாலைகள் திட்டம் (SRP )-2020-21**<br>**சிப்பம் – I**<br>கடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 3,7,10,12,17,18,19 மற்றும் 27 ஆகிய பகுதிகளுக்குட்பட்ட சாயப்பேட்டை தெரு, ரத்னா நகர், கருமாரப்பேட்டை முதல் தெரு, வடக்கு வேணுகோபாலபுரம், மேற்கு வேணுகோபாலபுரம், ராதாகிருஷ்ணன் நகர், சீத்தாராம் நகர், பாலாஜி நகர், லட்சுமி நகர், நபிகள் நாயகம் தெரு, சிக்கந்தர் தெரு, அருணகிரி தெரு மற்றும் சன்னதி தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணி. | 200.00 |
| 2 | **சிப்பம் – II**<br>கடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19, 20, 21 மற்றும் 28 ஆகிய பகுதிகளுக்குட்பட்ட மசூதி தெரு, இரட்டைபிள்ளையார் கோவில் தெரு, சொரக்கல்பட்டு வெகிள்மியர் தெரு முதல் வாண்டர்லேன் தெரு வரை, சிவா நகர், சிங்காரவேல் நகர்1,2மற்றும் 3வது குறுக்குத் தெரு, சக்தி நகர், கண்ணகி நகர் மற்றும் முத்தையா நகர் பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி. | 200.00 |
| 3 | **சிப்பம் – III**<br>கடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 29,33,34,37,39,41 மற்றும் 42 ஆகிய பகுதிகளுக்குட்பட்ட ராஜம் நகர், புருகீஸ்பேட்டை, ராமகிருஷ்ணா நகர், சொர்ணபுரி நகர், இ.பி காலனி மெயின் ரோடு மற்றும் குறுக்குத் தெரு, மோகன்சிங் தெரு, பென்சினர் சந்து 1 மற்றும் 2, ரோப் தெரு மற்றும் குறுக்குத் தெரு, வெலிங்டன் தெரு, சோனகர் தெரு மற்றும் கோவலன் தெரு ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி. | 200.00 |
| | மொத்தம் | **600.00** |

மேற்கண்ட 3 பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி 12.01.2021 அன்று பெறப்பட்டு கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களுக்கு மன்றத் தீர்மான எண் 3081 நாள் 31.01.2021ல் அனுமதி பெறப்பட்டு வேலை உத்திரவு 01.02.2021ல் வழங்கப்பட்டது.

**அட்டவணை –2**

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|
| 1 | **சிப்பம் – I** | திரு. டி. குமார் & சன்ஸ்,<br>ஜாபர்கான்பேட்டை, சென்னை –83 |
| 2 | **சிப்பம் – II** | திரு. இ. சரவணன்,<br>சைதாப்பேடடை, சென்னை –15. |
| 3 | **சிப்பம் – III** | திரு. இ. சரவணன்,<br>சைதாப்பேடடை, சென்னை –15 |

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் 01.09.2021 அன்று மேற்கொள்ளப்பட்ட காணொளி கூட்டத்தில் நகராட்சிகளின் நிதி சுமையை குறைக்கும் நோக்கத்தில், சிறப்பு சாலைகள் திட்டத்தில் துவக்கப்படாத பணிகளை இத்திட்டத்திலிருந்து ரத்து செய்து, அடுத்து வரும் சாலை மேம்பாட்டு திட்ட பணிகளில் சேர்த்து மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறப்புசாலைகள் திட்டப்பணிகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அனைத்து பணிகளும் ஆரம்பிக்கப்படாமல் உள்ளது. பணியினை ஆரம்பிக்கத் தெரிவித்து 28.06.2021 மற்றும் 09.08.2021 ஆகிய தேதிகளில் ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு கடிதம் அனுப்பியும் பணியினை ஆரம்பிக்கத் தவறியதால் மேற்படி பணிகளை ரத்து செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**7)** கடலூர் பெருநகராட்சிகுட்பட்ட மாலுமியர்பேட்டை நகராட்சி தொடக்க பள்ளி வகுப்பறை கட்டிடத்தினை மராமத்து செய்யும் பணி ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 04.08.2021ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீட்டு விகிதத்திற்கு** |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.கிருஷ்ணமுர்த்தி. பாகூர் | 0.11 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திருமதி.ஆர்.நவநீதம், கடலூார் | 0.18 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.எஸ்.கிருஷ்ணமுர்த்தி. பாகூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.11 % மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.கிருஷ்ணமுர்த்தி. பாகூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர்/ தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** **1.**மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| | 2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 8) | **மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற பேரவை அறிவிப்பு நாள்:24.08.2021ன்படி கடலூர் பெருநகராட்சிக்கு அருகில் உள்ள வளர்ச்சியடைந்த உள்ளாட்சி அமைப்புகளை ஒன்றினைத்து கடலூர் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து அரசு கூடுதல் தலைமை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை சென்னை அவர்களின் 26.08.2021-ம் தேதிய காணொளி காட்சி அறிவுரைகளில், கடலூர் நகராட்சியுடன் அருகிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளை ஒன்றித்து கடலூர் மாநகராட்சியாக தரம் உயர்த்த இசைவு தெரிவித்து உரிய நகரமன்றத் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பிவைக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. கடலூர் நகராட்சியையொட்டியுள்ள மேற்குறிப்பிடப்பட்ட கிராம ஊராட்சிகளை கடலூர் நகராட்சியுடன் இணைத்து கடலூர் மாநகராட்சியாக தரம் உயர்த்துவதால் மத்திய மற்றும் மாநில அரசுகள் அறிவிக்கும் திட்டங்களின் கீழ் சாலைகள், பாதாள சாக்கடை, குடிநீர் திட்டம், மழைநீரினை முறையாக வெளியேற்றுவதற்கான ஒருங்கிணைந்த மழைநீர் கால்வாய் திட்டம், திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த வாய்ப்புள்ளதால், இப்பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் பொருளாதார தரம் உயரும். எனவே, மேற்கண்ட கிராம ஊராட்சிகளை கடலூர் நகராட்சியுடன் இணைத்து கடலூர் மாநகராட்சியாக தரம் உயர்த்த இசைவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.** |
| **அ.கு.** | **கடலூர் நகராட்சி 27.69 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதும் தற்போது 198987 மக்கட் தொகை கொண்ட பெருநகராட்சியாகும், இந்நகரத்தினை சுற்றி அமைந்துள்ள மேற்கண்ட பெரியகங்கணாங்குப்பம், உச்சிமேடு, நாணமேடு, குண்டுஉப்பலவாடி, பச்சாங்குப்பம், குடிகாடு, கடலூர் ஓடி,(NMPL) கரையேறிவிட்டகுப்பம், அரிசிபெரியாங்குப்பம், திருவந்திபுரம், பாதிரிக்குப்பம், தோட்டப்பட்டு, கோண்டூர், நத்தப்பட்டு, மருதாடு, வெள்ளப்பாக்கம், சேடப்பாளையம், செம்மங்குப்பம், காரைக்காடு, ஆகிய 19 கிராம ஊராட்சிகளையும் கடலூர் பெருநகராட்சியுடன் இணைத்து மாநகராட்சியாக தரம் உயத்திட அரசுக்கு உரிய வழி முறைகள் மூலமாக பிரேரணைகள் வழங்கலாம்.** |
| 9) | கடலூர் பெருநகராட்சிக்கு சொந்தமான சொந்தமான 2021-22 முதல் 2023-24 முடிய 3 ஆண்டு குத்தகை இனம் எண்.4 மஞ்சக்குப்பம் அறிஞர் அண்ணா நாளங்காடி மற்றும் புதுப்பாளையம் காய்கறி நாளங்காடியின் உட்புறம் உள்ள தரை கடைகாரரிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு கீழ்கண்ட விவரப்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |

| அழைப்பு எண் | நாள் | பெயர் மற்றும் முகவரி | ஏலத்தில் கோரிய தொகை ஒரு ஆண்டுக்கு ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ஒரு ஆண்டுக்கு ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 15.02.2021 | -- | - | – |
| 2 | 23.02.2021 | – | – | – |
| 3 | 15.07.2021 | – | – | – |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | 28.07.2021 | திருமதி. பிரதீபா,<br>த/பெ. பிச்சைமுத்து<br>38, பகவதி அம்மன் கோயில் தெரு,<br>வில்வநகர்,<br>கடலூர். | ஏலம்கோர எவரும் முன்வரவில்லை | ரூ.71,000 |
| 5 | 13.08.2021 | திரு. பிரதீப்<br>த/பெ. பாபு<br>பகவதி அம்மன் கோயில் தெரு,<br>வில்வநகர், கடலூர். | ஏலம்கோர எவரும் முன்வரவில்லை | ரூ.1,06,500 |
| | 13.08.2021 | திருமதி. பிரதீபா,<br>த/பெ. பிச்சைமுத்து<br>38, பகவதி அம்மன் கோயில் தெரு,<br>வில்வநகர், கடலூர். | ஏலம்கோர எவரும் முன்வரவில்லை | ரூ.81,500 |
| | 13.08.2021 | திரு. கலைமுகிலன்,<br>த/பெ. பாலன்,<br>2, ஓம் சக்தி நகர்,<br>மஞ்சக்குப்பம், கடலூர். | ரூ.1,51,000 | – |

**1)** மேற்படி, குத்தகை இனம் 4 தொடர்பாக ஏற்கனவே மூன்று முறை அழைப்புக்கும், ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. நூன்காவது முறை ஒருவர் மட்டுமே ஒப்ந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.71,000/–

2) ஐந்தாவது முறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் இரண்டு நபர்கள் ரூ.81,500/– மற்றும் ரூ.1,06,500/– ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார்கள். இதில் ஏலத்தில் ஒருவர் மட்டுமே கலந்து கொண்டார். ஏலத்தொகை ரூ.1,51,000/–

3) மேற்படி பட்டியலில் கண்டுள்ளபடி திரு. கலைமுகிலன், த/பெ. பாலன், என்பவர் கோரிய ஏலத்தொகை ஒரு ஆண்டுக்கு ரூ.1,51,000/– கடந்த மூன்று ஆண்டின் சராசரி தொகை ரூ.49,713/-ஐ விட ரூ.1,01,287/- கூடுதலாக உள்ளது. மேலும் கடந்த ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து ரூ.53,471/- விட ரூ.97,529/– கூடுதலாக உள்ளது.

4) அலுவலக ரீதியாக 17.07.2021 முதல் 12.08.2021 வரை 27 நாட்கள் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.3490/– ஆகும். ஒருநாள் வசூல் ரூ.129/–

இதில் ஏலதாரரின் ஏலத் தொகைகளுடன் ஒப்பிடும்போது ரூ.1,03,824/–க்கு கூடுதலாக ஏலக்கேள்வி அமைந்துள்ளது. எனவே, திரு. கலைமுகிலன், த/பெ. பாலன், என்பவர் கோரும் ரூ.1,51,000/-ஐ ஏற்று குத்தகை உரிமம் வழங்குதல் குறித்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கலாம். ஆணையரின் மேலான அனுமதிக்கு.

**அ.கு.**

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் பொறுப்பு அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.

**10)** கடலூர் பெருநகராட்சிக்கு சொந்தமான 2021-22 முதல் 2023-24 முடிய 3 ஆண்டு குத்தகை இனம் எண்.16, கடலூர் நகராட்சி எல்லை முழுவதும் வாகனங்கள் மூலம்

பொருட்கள் கொண்டுவந்து விற்பதற்கு வாகனங்களிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு கீழ்கண்ட விவரப்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| அழைப்பு எண் | நாள் | பெயர் மற்றும் முகவரி | ஏலத்தில் கோரிய தொகை ஒரு ஆண்டுக்கு ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ஒரு ஆண்டுக்கு ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 15.02.2021 | திருமதி. ஷோபனா, க/பெ. லோகநாதன், அம்பேத்கர் நகர், வண்டிப்பாளையம், கடலூர். | ஏலம்கோர எவரும் முன்வரவில்லை | 1,44,000 |
| 2 | 23.02.2021 | – | ஏலம்கோர எவரும் முன்வரவில்லை | ஒப்பந்தப்புள்ளி எதுவும் பெறப்படவில் லை |
| 3 | 15.07.2021 | திருமதி. ஷோபனா, க/பெ. லோகநாதன், அம்பேத்கர் நகர், வண்டிப்பாளையம், கடலூர். | ஏலம்கோர எவரும் முன்வரவில்லை | 1,45,000 |
| 4 | 13.08.2021 | திரு. ராமன், த/பெ. சொல்லக்காட்டான், 107, முத்து மாரியம்மன் கோவில் தெரு, பி.என் பாளையம், பண்ருட்டி, கடலூர். | ஏலம்கோர எவரும் முன்வரவில்லை | 1,61,000 |
| 5 | 02.09.2021 | திரு.ஞானவேல், த/பெ.முத்தையன், பகவதி அம்மன் கோவில் தெரு, வள்ளலார் நகர், 2வது தெரு,வில்வ நகர், மஞ்சக்குப்பம், கடலூர். | ஏலம்கோர எவரும் முன்வரவில்லை | 1,62,000 |
| | | திரு. ராமன், த/பெ. சொல்லக்காட்டான், 107, முத்து மாரியம்மன் கோவில் தெரு, பி.என் பாளையம், பண்ருட்டி, கடலூர். | ஏலம்கோர எவரும் முன்வரவில்லை | 1,63,000 |

மேற்படி, பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகை ஒரு ஆண்டுக்கு ரூ.1,63,000/– கடந்த மூன்று ஆண்டின் சராசரி தொகை ரூ.1,31,354/-ஐ விட ரூ.31646/- கூடுதலாக உள்ளது. கடந்த ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து ரூ.144704/- விட ரூ.18296/– கூடுதலாக உள்ளது. எனவே, திரு. ராமன், த/பெ.

| | |
|---|---|
| | சொல்லக்காட்டான், என்பவர் கோரிய ரூ.1,63,000/– க்கு (ரூபாய் ஒரு லட்சத்தி அறுபத்தி மூவாயிரம் மட்டும்) மேற்கண்ட குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அ.கு. | 1) அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் பொறுப்பு அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் ஏற்கலாம். |
| 11) | கடலூார் பெருநகராட்சி அலுவலகத்தில் கீழ்க்கண்ட கணினிகள் மற்றும் கணினி சார்ந்த சாதனங்கள் பயன்பாட்டில் உள்ளது. |

| வ.எண் | சாதனங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கணினிகள் Key Board & Mouse | 34 |
| 2 | வசூல் மையத்தில் உள்ள கணினிகள் | 5 |
| 3 | அலுவலகத்தில் உள்ள HP பிரிண்டர் | 5 |
| 4 | வசூல் மையத்தில் உள்ள DMP பிரிண்டர் | 5 |
| 5 | HP ஸ்கேனர் | 2 |
| 6 | Image Runner Copies (Taskalfa 32121 Xerox machine) | 1 |
| 7 | Canon பிரிண்டர் | 1 |
| 8 | HP 436 DN பிரிண்டர் | 4 |
| | மொத்தம் | 57 |

மேற்படி 57 எண்ணிக்கையில் உள்ள கணினி மற்றும் கணினி சார்ந்த சாதனங்களில் பழுது ஏற்பட்டால், அதனை உடனுக்குடன் சரிசெய்தால் மட்டுமே அன்றாட அலுவல் சார்ந்த பணிகள் மேற்கொள்ள இயலும் என்பதால், மேற்படி சாதனங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3,00,000/- க்கு நிர்வாக அனுமதியும், மேற்படி பணியினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |
| 12) | கடலூார் பெருநகராட்சிக்கு கீழ்கண்ட எழுது பொருட்கள் விநியோகம் செய்ய அங்கீகரிப்பட்ட கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலமாக கொள்முதல் செய்ய மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளி (02.09.2021) விலைப்புள்ளி பெறப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டது. |

| Sl. No | Description | Quantity | Szenthil Paper Store (Cuddalore) Rate with GST | Chennai Printing and Stationery (Chennai) Rate with GST | Sangu Nagar Stationery Printing (Chennai) Rate with GST | Korattur Printing (Chennai) Rate with GST | MMM Enterprises (Chennai) Rate with GST | குறைந்த விலைப்புள்ளி பெறப்பட்டுள்ள விபரம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | File Pad Ugrent & Ordinary Special | One | 20.00 | 28.00 | 25.00 | 23.00 | 22.00 | 20.00 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | A4 white sheet 80 GCM | One | 174.12 | 295.00 | 290.00 | 270.00 | 245.00 | 174.12 |
| 3 | A3 FS white sheet 80 GCM | One | 214.29 | 335.00 | 330.00 | 317.00 | 286.00 | 214.29 |
| 4 | Rapper Sheet Printed | One | 2.30 | 6.50 | 4.50 | 3.50 | 3.10 | 2.30 |
| 5 | Office Cover 6X4 Brown Color Printed | One | 0.55 | 3.40 | 1.60 | 1.40 | 1.29 | 0.55 |
| 6 | Office Cover 9 X 4 Brown Color Printed | One | 0.72 | 3.68 | 1.68 | 1.56 | 1.43 | 0.72 |
| 7 | Office Cover 10 X5 Brown Color Printed | One | 0.81 | 2.98 | 2.10 | 1.98 | 1.82 | 0.81 |
| 8 | Stamp Pad Big Camlin | One | 63.55 | 85.00 | 81.00 | 79.00 | 73.00 | 63.55 |
| 9 | Stamp Pad Small Camlin | One | 25.42 | 64.00 | 60.00 | 57.00 | 53.00 | 25.42 |
| 10 | Tag First Quality | One | 0.50 | 1.80 | 0.70 | 0.67 | 0.65 | 0.50 |
| 11 | 200Pages Ruled Long Size Binding நோட் | One | 117.85 (172 Pages) | 149.00 | 160.00 | 135.00 | 124.00 | |
| 12 | 200 Pages Un-Ruled Long Size Binding நோட் | One | 44.64 (192 Pages) | 149.00 | 160.00 | 135.00 | 124.00 | |
| 13 | Toner 55A HP | One | 10679.66 | 13900.00 | 13900.00 | 13870.00 | 12619.00 | 10679.66 |
| 14 | Toner 53A HP | One | 7079.66 | 9300.00 | 9300.00 | 9220.00 | 8389.00 | 7079.66 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | Toner 88A HP | One | 3720.33 | 4925.00 | 4825.00 | 4805.00 | 4369.00 | 3720.33 |
| 16 | Toner 12A HP | One | 4739.83 | 6250.00 | 6180.00 | 6123.00 | 5569.00 | 4739.83 |
| 17 | Toner 56A HP | One | 1979.66 | 2850.00 | 2750.00 | 2722.00 | 2504.00 | 1979.66 |
| 18 | Gum Camel 700 ML | One | 53.38 | 160.00 | 160.00 | 156.00 | 144.00 | 53.38 |
| 19 | Stapler Medium Kangaroo | One | 42.37 | 55.00 | 50.00 | 46.00 | 42.00 | 42.00 |
| 20 | Stapler Medium Pin | One | 6.77 | 9.00 | 10.00 | 8.00 | 7.08 | 6.77 |
| 21 | Canon NPG-67 Toner Black | One | 4800.00 | 6420.00 | 6300.00 | 6200.00 | 5639.00 | 4800.00 |
| 22 | Thread | One | 23.80 | 32.00 | 28.50 | 28.00 | 24.75 | 23.80 |
| 23. | EPSON LX – 310 80 Colum With Ribbon | One | 186.00 | 16980.00 | 16750.00 | 16662.00 | 15329.00 | 186.00 |
| 24. | KYOCER – TK - 7120 | One | 4560.00 | 7040.00 | 7150.00 | 6999.00 | 6369.00 | 4560.00 |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.11, 12–ஐ தவிர இதர இனங்கஎ கடலூர் செந்தில் பேப்பர் ஸ்டோர் குறைவான விலைப்புள்ளி சமர்பிக்கப்பட்டதை ஏற்று எ( பொருட்கள் வாங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டது.

**அ.கு.**

1) அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் பொறுப்பு அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.

( ந.க. எண்.195 /2020 /அ2 )

**13)**

கடலூர் பெருநகராட்சிக்கு சொந்தமான மஞ்சக்குப்பம் அறிஞர் அண்ணா நாள் அங்காடி கடை எண்.20 வரி விதிப்பு எண்.212 கடையின் உரிமையாளர் திரு.அப்துல் அமீது என்பவர் இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கடை வாடகை செலுத்தாததால் பூட்டி சீல் வைக்கப்பட்டது இதனை எதிர்த்து 1. திரு.பாபு த/பெ.வரதராஜூலு 2. இராமச்சந்திரன் த/பெ.ஆறுமுகம் மற்றும் 3. தட்சிணாமூர்த்தி த/பெ.குப்புராமன் அகிய மூவரும் நீதிபோராணை எண்.18878/2021 வழக்கு தொடர்ந்துள்ளனர். இவ்வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு. P.சீனிவாஸ் என்பவர் ஆஜராகி வருகிறார். திரு. P.சீனிவாஸ் என்பவரின் 18.09.2021 தேதிய கடிதத்தின் படி வழக்கு கட்டணம் மற்றும் இதர செலவிற்கு ரூ.15,000/– வழங்க கூறியுள்ளார். மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அ.கு.**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர்அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடரப்பட்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க. எண்.8594/2021 /அ2 )

**14)** தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–22 ல் தெரிவித்துள்ளவாறு, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கடலூார் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 10 புல்லுகடை தெரு பகுதியில் நவீன நூலக கட்டிடம் கட்டும் பணி ரூ.86.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கும் விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**15)** கடலூர் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட 45 வார்டு பகுதிகளில் 8570 எண்ணிக்கையிலான அனைத்து தெருவிளக்குகளை பராமரிக்க தேவையான மின் உபகரணங்கள் ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யும் பணிக்கு 15.09.2021–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள ஆறு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | ஜெயந்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கடலூர் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | US அசோசியேட்ஸ், கடலூர் | 0.25% மதிப்பீட்டை விட குறைவு |
| 3 | சன் இன்ஜினியரிங் எனர்ஜிஸ், கடலூர் | 0.18% மதிப்பீட்டை விட குறைவு |
| 4 | ஸ்ரீ அபிராமி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கடலூர் | 3.20% மதிப்பீட்டை விட அதிகம் |
| 5 | ஆர். விவேகானந்தன், விம் கோ நகர், சென்னை – 600 057 | 0.94% மதிப்பீட்டை விட அதிகம் |
| 6 | சாய் எண்டர்பிரைசஸ், ராயப்பேட்டை, சென்னை – 600 014 | 0.07% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்படி, பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1 ஜெயந்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கடலூர் மற்றும் வ.எண்.2 ல் US அசோசியேட்ஸ், கடலூர் ஆகியோரின் ஒப்பந்தப்புள்ளிகளில் வரைவோலை மற்றும் ஒப்பந்தப்புள்ளி நமூனா மட்டுமே இணைக்கப்பட்டுள்ளது. இதர விவரங்கள் இணைக்கப்படவில்லை. எனவே, வ.எண்.1 மற்றும் 2ல் கண்டுள்ள இரு ஒப்பந்தபுள்ளிகளையும் நிராகரிக்கலாம்.

மீதமுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.3ல் கண்ட சன் இன்ஜினியரிங் எனர்ஜிஸ், கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.18% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள சன் இன்ஜினியரிங் எனர்ஜிஸ், கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண்.7998/2021/இ2)

| | |
|---|---|
| 16) | கடலூர் பெருநகராட்சிகுட்பட்ட திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 12 எண்ணிக்கை ஆழ்துளை கிணறு நீர்முழ்கி மோட்டார்களையும் மற்றும் அங்குள்ள அனைத்து உயர்நிலை, கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு படுகைகளை இயக்கி பராமரித்தில் செய்யும் பணிக்கு ரூ.2.75 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.78 நாள்:31 .05.2021 மற்றும் நகர்மன்ற தீர்மான எண்.82 நாள்: 31.05,2021ன்படி பணி மேற்கொள்ளப்பட்டது. தற்போது இப்பணி காலம் முடிவடைவதால் நிர்வாக நலன் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோர முடியாத காரணத்தினால் இப்பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் ஏற்கனவே ஒப்பந்ததப்புள்ளி எடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு, T. சேஷாத்திரி, கடலூர் அவர்களின் மூலம் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின்படி கூடுதலாக மூன்று மாத காலத்திற்கு (செப்டம்பர் முதல் 2021 நவம்பர் 2021 வரை) இப்பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
| 17) | கடலூர் பெருநகராட்சிகுட்பட்ட திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து குடிநீர் பெறுகின்ற திருப்பாப்புலியூர், கம்மியம்பேட்டை, தீபன் நகர், காமராஜர் நகர், தேவனாம்பட்டினம், தேவனாம்பட்டினம் சுனாமி குடியிருப்பு, பத்மாவதி நகர், நேரு நகர் ஆகிய மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் கூத்தப்பாக்கம், குண்டுசாலை வீட்டுவசதி வாரிய குடியிருப்பு ஆகிய கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் அதற்கான மோட்டார்கள் வால்வுகளை இயக்கி பராமரித்திட பணியாளர்கள் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.6.40 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 80 நாள்: 31.05.2021 மற்றும் நகர்மன்ற தீர்மான எண்.83 நாள்: 31.05.2021ன்படி பணி மேற்கொள்ளப்பட்டது. தற்போது இப்பணி காலம் முடிவடைவதால் நிர்வாக நலன் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோர முடியாத காரணத்தினால் இப்பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் ஏற்கனவே ஒப்பந்ததப்புள்ளி எடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு, T. சேஷாத்திரி, கடலூர் அவர்களின் மூலம் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின்படி கூடுதலாக மூன்று மாத காலத்திற்கு (செப்டம்பர் முதல் 2021 நவம்பர் 2021 வரை) இப்பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
| 18) | கடலூர் பெருநகராட்சிகுட்பட்ட கேப்பர் மலை தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து சரவணா நகர், சோனான்குப்பம், பச்சையான்குப்பம், சிவானந்தபுரம், ஏணிக்காரன்தோட்டம், சுனாமி குடியிப்பு ஆகிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் வண்டிப்பாளையம், செல்லங்குப்பம், வில்வநகர் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு ஆகிய கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் அதற்கான மோட்டார்கள் வால்வுகளை இயக்கி பராமரித்திட பணியாளர்கள் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.6.40 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 79 நாள்: 31.05.2021 மற்றும் நகர்மன்ற தீர்மான எண். 84 நாள்: 31.05.2021 ன்படி பணி மேற்கொள்ளப்பட்டது. தற்போது இப்பணி காலம் முடிவடைவதால் நிர்வாக நலன் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோர முடியாத காரணத்தினால் இப்பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் ஏற்கனவே ஒப்பந்ததப்புள்ளி |

| | |
|---|---|
| | எடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு, T. சேஷாத்திரி, கடலூர் அவர்களின் மூலம் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின்படி கூடுதலாக மூன்று மாத காலத்திற்கு (செப்டம்பர் முதல் 2021 நவம்பர் 2021 வரை) இப்பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| **அ.கு.** | மன்றம் அனுமதிக்கலாம் |
| **19)** | கடலூர் பெருநகராட்சிகுட்பட்ட கேப்பர்மலை தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 11 எண்ணிக்கை 25 HP ஆழ்துளை கிணறு நீர்மூழ்கி மோட்டார்களையும் மற்றும் அங்குள்ள அனைத்து உயர்நிலை, கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு படுகைகளை இயக்கி பராமரித்திட பணியாளர்களை விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.2.75 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.77 நாள்: 31.05.2021 மற்றும் நகர்மன்ற தீர்மான எண். 81 நாள்: 31.05.2021ன்படி பணி மேற்கொள்ளப்பட்டது. தற்போது இப்பணி காலம் முடிவடைவதால் நிர்வாக நலன் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோர முடியாத காரணத்தினால் இப்பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் ஏற்கனவே ஒப்பந்ததப்புள்ளி எடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு,T.சேஷாத்திரி, கடலூர் அவர்களின் மூலம் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின்படி கூடுதலாக மூன்று மாத காலத்திற்கு (செப்டம்பர் முதல் 2021 நவம்பர் 2021 வரை) இப்பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| **அ.கு.** | மன்றம் அனுமதிக்கலாம் |
| **20)** | கடலூர் பெருநகராட்சி பாதா சாக்கடை பராமரிப்பு பணிக்காக இயங்கி வரும் பதிவெண் கொண்ட ஜெட்ராடிங் வாகனத்திற்கு ஆயுள் காப்பீடு 30.10.2021ல் முடிவடைகிறது. எனவே, மேற்படி வாகனத்திற்கு 31.10.2021 முதல் 30.10.2022 வரைஆயுள் காப்பீட்டை புதுப்பிக்கவும், இதற்கான செலவின தொகை ரூ.40,460/– ஐ நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்படி தொகையினை நேஷனல் இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| **அ.கு.** | மன்றம் அனுமதிக்கலாம். |
| **21)** | கடலூர் பெருநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் பதிவெண் கொண்ட ஈப்பு வாகனத்திற்கு ஆயுள் காப்பீடு 08.10.2021ல்முடிவடைகிறது. எனவே, மேற்படி வாகனத்திற்கு 09.10.2021 முதல் 08.10.2022 வரை ஆயுள் காப்பீட்டைபுதுப்பிக்கவும், இதற்கான செலவினத் தொகை ரூ.11525/–ஐ நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்படி தொகையினை நேஷனல் இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| **அ.கு.** | மன்றம் அனுமதிக்கலாம். |
| **22)** | கடலூர் பெருநகராட்சியில் வெளிபுறம் மற்றும் உட்புறம் பணிபுரியும் நிரந்தர தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள் (சீருடை இரண்டு |

| | |
|---|---|
| | ஆண்டுக்கு ஒரு முறை – 2019–2020 ஆண்டு சீருடை வழங்கப்பட்டுள்ளது. 2020–2021 ஆம் ஆண்டு வழங்கப்படவில்லை. எனவே 2021–2022 ஆம் ஆண்டு சீருடை வழங்கப்படவேண்டும்) மகப்பேறு பணியாளர்கள், குடிநீர் பிரிவு பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், சங்கிலியாளர்கள், இரவு காவலர்கள் ஆகியோருக்கு சீருடைகள் வழங்கப்பட வேண்டும்.<br>எனவே மேற்கண்ட பணியாளர்களுக்கு 2021–2022 ஆம் ஆண்டிற்கான சீருடைகள் வழங்கவும் மற்றும் அதற்கான தையல் கூலி செட்டு ஒன்றுக்கு ஆண்களுக்கு ரூ.500/–, பெண்களுக்கு ரூ.40/– எனவும், மகப்பேறு உதவியாளருக்கு சீருடைப் படியாக ரூ.2000/– (அரசாணை எண்.306, நிதித் துறை (ஊதியக்குழு) , நாள்.13.10.2017) ன்படி வழங்கவும், அதற்கான தோராய செலவினத் தொகை ரூ. 8,00,000/– ( எட்டு லட்சம் ரூபாய்) ஐ நகராட்சி நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| **அ.கு.** | அவசியம் அவசரம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். ந. க. எண்.6459/2020/எச்1 |
| **23)** | கடலூர் பெருநகராட்சியில் வெளிபுறம் மற்றும் உட்புறம் பணிபுரியும் நிரந்தர தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள் (சீருடை இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை – 2019–2020 ஆண்டு சீருடை வழங்கப்பட்டுள்ளது. 2020–2021 ஆம் ஆண்டு வழங்கப்படவில்லை. எனவே 2021–2022 ஆம் ஆண்டு சீருடை வழங்கப்படவேண்டும்) மகப்பேறு பணியாளர்கள், குடிநீர் பிரிவு பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், சங்கிலியாளர்கள், இரவு காவலர்கள் ஆகியோருக்கு சீருடைகள் வழங்கப்பட வேண்டும்.<br>மேலும் 2020–2021 ஆண்டுக்கான சீருடை வழங்க கோ–ஆப்டெக்ஸ் மற்றும் காதி கிராப்ட், கடலூர் ஆகிய இரு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடம் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில், இரு நிறுவனங்களின் விலைப்புள்ளி விகிதம் வித்தியாசம் உள்ளதால், துணிகளின் தரம் குறித்து தூய்மை பணியாளர்களிடமும், சங்க நிர்வாகிகளிடமும் பேசப்பட்டதில், தங்களுக்கு கடந்த 10 ஆண்டுகளாக காதி கிராப்ட் ,கடலூர் நிறுவனத்தின் மூலமாக சீருடை வழங்கப்பட்டதாகவும், அதன் தரம் நன்றாக உள்ளதால், தங்களுக்கு காதி கிராப்ட் ,கடலூர் நிறுவனத்திலேயே சீருடை வாங்கி வழங்குமாறு கோரியுள்ளனர்.<br><br>எனவே மேற்கண்ட பணியாளர்களுக்கு 2021–2022 ஆம் ஆண்டிற்கான சீருடைகளை துமிழ்நாடு கதர்கிராம தொழில் நிறுவனம், கடலூர் அவர்களுக்கு சீருடைகள் வழங்கிட உத்தரவு வழங்கவும் மற்றும் அதற்கான தையல் கூலி செட்டு ஒன்றுக்கு ஆண்களுக்கு ரூ.500/–, பெண்களுக்கு ரூ.40/– எனவும், மகப்பேறு உதவியாளருக்கு சீருடைப்படியாக ரூ.2000/– ( அரசாணை எண்.306, நிதித் துறை (ஊதியக்குழு) ,நாள்.13.10.2017) ன்படி வழங்கவும், அதற்கான செலவினத் தொகை ரூ. 8,00,000/– ( எட்டு லட்சம் ரூபாய்) ஐ நகராட்சி நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| **அ.கு.** | அவசியம் அவசரம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். ந. க. எண்.6459/2020/எச்1 |
| **24)** | கடலூர் பெருநகராட்சியில் எல்லைக்குட்பட்ட 45 வார்டுகளில் டெங்கு நோய் மற்றும் நீரின் மூலம் பரவும் நோய்கள் மற்றும் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கபசுர குடிநீர் வழங்குதல், சளி , இருமல் மற்றும் காய்ச்சல் குறித்த கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ள துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அவர்களின் கடிதம் ந.க.எண்.86/டு4/2020 நாள். 28.10.2020 மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண்.பஇ1/6198/2020, நாள். 06.01.2021 கடிதத்தில் |

| | |
|---|---|
| | நோய் தடுப்பு நடவடிக்கைக்காக கூடுதலாக தற்காலிக களப்பணியாளர்களை பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது.<br>கடலூர் பெருநகராட்சியில் குப்பைக்கிடங்கு மூடப்பட்டதால், குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை தரம் பிரிக்க வேண்டியுள்ளது. எனவே மக்கும் குப்பை, மக்காத குப்பை எனத் தரம் பிரிக்க போதிய அளவு தூய்மை பணியாளர்கள் இல்லாத காரணத்தால் உரக்கிடங்கில் மக்கும் குப்பை, மக்காத குப்பை பிரிக்க, நாள் ஒன்றுக்கு ரூ 305/– வீதம் தினக்கூலி அடிப்படையில், ஆகஸ்ட் – 2021 மாதம் 30 தற்காலிக டெங்கு பணியாளர்களை அன்னபூரணி மகளிர் சுய உதவிக்குழு மூலம் பெற்று பணி செய்யவும் ( ஞாயிறு உட்பட), தற்காலிக டெங்கு பணியாளர்கள் பணிபுரிந்த நாட்களுக்கு அவர்களுக்கான தினக்கூலியை வருகை பதிவேட்டின்படி, அன்னபூரணி மகளிர் சுய உதவிக் குழு மூலம் வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள தோராய செலவினத் தொகை ரூ.3,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | அவசியம் அவசரம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். ந. க. எண்.4218/2020/எச்2 |
| 25) | கடலூர் பெருநகராட்சியில் எல்லைக்குட்பட்ட 45 வார்டுகளில் டெங்கு நோய் மற்றும் நீரின் மூலம் பரவும் நோய்கள் மற்றும் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கபசுர குடிநீர் வழங்குதல், சளி , இருமல் மற்றும் காய்ச்சல் குறித்த கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ள துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அவர்களின் கடிதம் ந.க.எண்.86/டு4/2020 நாள். 28.10.2020 மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண்.பஇ1/6198/2020, நாள். 06.01.2021 கடிதத்தில் நோய் தடுப்பு நடவடிக்கைக்காக கூடுதலாக தற்காலிக களப்பணியாளர்களை பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது.<br>எனவே டெங்கு நோய் மற்றும் நீரின் மூலம் பரவும் நோய்கள் மற்றும் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வீடு வீடாக சென்று டெங்கு கொசு உற்பத்தி காரணிகளை கண்டெடுத்து அழித்தல் மற்றும் டெங்கு கொசு உற்பத்தியை தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்துதல், கபசுர குடிநீர் வழங்குதல், சளி , இருமல் மற்றும் காய்ச்சல் குறித்த கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், கொரோனா பரிசோதனை மேற்கொள்ள மக்களை அழைத்து வருதல் மற்றும் முகக்கவசம் அணியாதவர்கள் மற்றும் சமூக இடைவெளி கடைப்பிடிக்காத கடைகளுக்கு அபராதம் விதிக்கும் குழு ஆகியவற்றிற்க்கும், போதிய அளவு தூய்மை பணியாளர்கள் இல்லாத காரணத்தால் உரக்கிடங்கில் மக்கும் குப்பை, மக்காத குப்பை பிரிக்கவும், கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் நாள் ஒன்றுக்கு ரூ 305/– வீதம் தினக்கூலி அடிப்படையில், 127 தற்காலிக டெங்குப்பணியாளர்களை அன்னபூரணி மகளிர் சுய உதவிக்குழு மூலம் பெற்று செப்டம்பர் – 2021 முதல் டிசம்பர் – 2021 வரை நான்கு மாதங்கள் பணி செய்யவும் ( ஞாயிறு உட்பட) , தற்காலிக டெங்கு பணியாளர்கள் பணிபுரிந்த நாட்களுக்கு அவர்களுக்கான தினக்கூலியை வருகை பதிவேட்டின்படி அன்னபூரணி மகளிர் சுய உதவிக் குழு மூலம் வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள தோராய செலவினத் தொகை ரூ. 50,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | கொரோனா வைரஸ் பெருந்தொற்று கால அவசியம் அவசரம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். ந. க. எண்.4218/2020/எச்2 |

| | |
|---|---|
| **26)** | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.ப.3) அரசாணை நிலை எண் 101 நாள் 30.04.1997 ன் வழிகாட்டுதல் மற்றும்அளவுகோலின்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க. எண் 25580/ 2015/ பி3 நாள் 07.01.2010 எண்ணிட்ட செயல்முறையின்படி 3 ஆண்டுகளுக்கு மேல் 107 துாய்மை பணியாளர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயித்துள்ள தினக்கூலி அடிப்படையில் துாய்மைப் பணியில் தற்காலிகமாக ஈடுபடுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>மேலும், 10.11.2018ம் தேதி நடைபெற்ற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் (கடலுார்) ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரையின்படி கூடுதலாக 50 பணியாளர்களை கொண்டு துாய்மை பணி செய்ய தெரிவிக்கப்பட்டு அதன்படி நகர்மன்ற தீர்மானம் 2319 நாள் 22.10.2018ல் 50 பணியாளாகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டு 157 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணி செய்து வருகின்றார்கள்.<br>மேற்படி பணிக்கான ஒப்பந்தக்காலம் 28.02.2019ல் முடிவடைந்து விட்டது. எனவே புதிய ஒப்பந்தப்புள்ளி கோரிட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி வழங்கக் கோரி ந.க. எண் 538/2019/எச் 1 என்ற கோப்பின் மூலம் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. கோப்பு நடவடிக்கையில் உள்ளதால், புதிய ஒப்பந்ததாரா் முடிவு செய்ய அனுமதி வரும் வரையில் தற்காலிகமாக 2021 ஜுலை,ஆகஸ்ட், செப்டம்பா் ஆகிய மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டது.<br>தற்போது கொரோனா தொற்று இரண்டாம் அஅலையின் காரணமாகவும், நிர்வாக அனுமதி வரும் வரையில் பொதுமக்களின் துாய்மைப் பணியின் அவசியம் கருதி 2021 அக்டோபர், நவம்பர், டிசம்பர் வரை ஆகிய மூன்று மாதங்களுக்கு எஸ்.வி.டி.கன்ஸ்ட்ரக்ஷன், கடலுார் என்ற தனியார் நிறுவனத்தின் பழைய ஒப்பந்ததாரா் மூலம் (நபா் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.305/–) என்ற ஊதியம் ஒப்பந்தம் அடிப்படையில் துாய்மைப் பணியினை செய்திட கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| **அ.கு.** | மன்றம் அனுமதிக்கலாம். **(10570/ 2016/ எச் 1)** |

நகராட்சி அலுவலகம்
கடலுார்
நாள் 30/10/2021

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலுார் பெருநகராட்சி.